www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## எட்டாம் வகுப்பு

நேரம்: 2.30 மணி அறிவியல் மதிப்பெண்கள்: 100

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:-** 15×1=15

1) கீழ்க்கண்டவற்றுள் எது ஆங்கிலேய அலகு முறை?

அ) CGS ஆ) MKS இ) FPS ஈ) SI

2) வெப்பநிலையின் SI அலகு ______

அ) செல்சியஸ் ஆ) ஃபாரன்ஹீட் இ) கெல்வின் ஈ) ஆம்பியர்

3) அழுத்தத்தின் அலகு

அ) பாஸ்கல் ஆ) $Nm^{-2}$ இ) பாய்ஸ் ஈ) அ மற்றும் ஆ

4) வாகனங்களில் பின் காட்சி ஆடியாகப் பயன்படுத்தப்படும் ஆடி

அ) குழி ஆடி ஆ) குவி ஆடி இ) சமதள ஆடி ஈ) எதுவுமில்லை

5) வெப்பம் என்பது ஒரு வகையான ______

அ) மின்னாற்றல் ஆ) ஈர்ப்பு ஆற்றல் இ) வெப்ப ஆற்றல் ஈ) ஏதுமில்லை

6) பாதரசத்தின் குறியீடு ______

அ) Ag ஆ) Hg இ) Au ஈ) Pb

7) காகிதம் எரிதல் என்பது ஒரு ______ மாற்றம்

அ) இயற்பியல் ஆ) வேதியியல்

இ) இயற்பியல் மற்றும் வேதியியல் ஈ) நடுநிலையான

8) அசோட் எனப்படுவது எது?

அ) ஆக்ஸிஜன் ஆ) நைட்ரஜன் இ) சல்பர் ஈ) கார்பன் டை ஆக்சைடு

9) நுண்ணுயிரிகள் ______ இல் அளவிடப்படுகின்றன

அ) செ.மீ ஆ) மி.மீ இ) மைக்ரான் ஈ) மீட்டர்

10) பாக்டீரியாக்கள் வடிவத்தின் அடிப்படையில் ______ பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன

அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5

11) உண்ணத் தகுந்த காளான்

அ) பாலிபோரஸ் ஆ) அகாரிகஸ் இ) பெனிசிலியம் ஈ) அஸ்பர்ஜில்லஸ்

12) மண் அரிப்பைத் தடுக்கும் தாவரங்கள்

அ) பாசிகள் ஆ) பூஞ்சைகள்

இ) பிரையோஃபைட்டுகள் ஈ) டெரிடோஃபைட்டுகள்

www.Padasalai.Net

CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



13) இரு சொற்பெயரிடு முறை முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு ____

அ) 1970 ஆ) 1975 இ) 1978 ஈ) 1623

14) ______ என்பது உறுதியான தடித்த வெண்ணிற உறையாக அமைந்து கண்ணின் உள்பாகங்களைப் பாதுகாக்கிறது.

அ) ஸ்கிளிரா ஆ) கண்ஜங்டிவா இ) கார்னியா ஈ) ஐரிஸ்

15) ______ செல்கள் சிறப்பு வாய்ந்த செல்களாகும். இவை உடலின் எந்த ஒரு செல்லாகவும் மாற இயலும்.

அ) நரம்பு ஆ) மூல இ) இதய ஈ) எலும்பு

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக. 10×1=10**

16) மின்னோட்டத்தினை அளவிடப் பயன்படும் கருவி ______ ஆகும்.

17) எளிய பாதரசமானி முதன்முதலில் ______ என்பவரால் உருவாக்கப்பட்டது.

18) கண் மருத்துவர் கண்களைப் பரிசோதிக்கப் பயன்படுத்தும் ஆடி ______

19) கலோரி மீட்டர் என்ற சாதனம் ______ ஐ அளக்கப் பயன்படுகிறது.

20) டங்ஸ்டனின் குறியீடு ______

21) ஒளிச்சேர்க்கை என்பது ______ முன்னிலையில் நிகழும் ஒரு வேதிவினையாகும்

22) ______ உரமாகப் பயன்படுகிறது.

23) நுண்ணுயிரிகளை ______ ன் உதவியுடன் காண முடியும்.

24) ஒரு விதையிலைத் தாவரங்கள் ______ விதையிலையினை மட்டுமே கொண்டுள்ளன.

25) அகார் அகார் ______ என்ற பாசியிலிருந்து பெறப்படுகிறது.

**III. பொருத்துக. 10×1=10**

| | | |
|---|---|---|
| 26) துருப்பிடித்தல் | - | ஒளிச்சேர்க்கை |
| 27) மின்னாற்பகுத்தல் | - | ஹேபர் முறை |
| 28) வெப்ப வேதிவினை | - | இரும்பு |
| 29) ஒளி வேதிவினை | - | பிரைன் |
| 30) வினைவேகமாற்றம் | - | சுண்ணாம்புக்கல் சிதைவடைதல் |
| 31) நைட்ரஜனை நிலைப்படுத்தும் பாக்டீரியா | - | தடுப்பூசி |
| 32) காசநோய் | - | பிரியான் |

CS CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



33) குரு - லேக்டோபேசில்லஸ

அசிடோபிலஸ்

34) புரோபயாட்டிக்ஸ் - பாக்டீரியா

35) எட்வர்ட் ஜென்னர் - ரைசோபியம்

**IV. சரியா அல்லது தவறா எனக் கூறுக. 5×1=5**

36) இயங்கும் பொருள் உராய்வின் காரணமாக ஓய்வு நிலைக்கு வருகிறது.

37) ஒரு வேதிவினை என்பது தற்காலிக வினையாகும்.

38) பெண் அனோபிலஸ் கொசுக்கள் டெங்கு வைரஸ் கிருமிகளைப் பரப்புகின்றன.

39) பைனஸ் ஒரு மூடிய விதைத்தாவரம்.

40) மனிதன் ஒரு வெப்ப இரத்தப் பிராணி

**V. ஏதேனும் 15 வினாக்களுக்கு மட்டும் விடையளி:- 15×2=30**

41) அளவீடு என்றால் என்ன?

42) மின்னோட்டம் என்றால் என்ன?

43) உராய்வை குறைக்க ஏதேனும் மூன்று வழிமுறைகளைக் கூறுக.

44) பாஸ்கல் விதியைக் கூறி அதன் பயன்பாடுகளைத் தருக.

45) குவியத்தொலைவு - வரையறு

46) குழி ஆடி மற்றும் குவி ஆடிகளின் பயன்களுள் இரண்டினைத் தருக.

47) வெப்பம் கடத்தப்படும் முறைகள் யாவை?

48) ஒரு கலோரி - வரையறு

49) இரசவாதம் -வரையறு

50) அலங்கார நகை தயாரிப்பில் பயன்படும் உலோகங்களைக் குறிப்பிடுக.

51) வேதிவினை என்பதை வரையறு

52) மாசுபடுதல் என்றால் என்ன?

53) நைட்ரஜனின் பயன்கள் யாவை?

54) உலக வெப்பமயமாதல் என்றால் என்ன?

55) வடிவத்தின் அடிப்படையில் நான்கு வகையான பாக்டீரியாக்களின் பெயர்களை எழுதுக.

56) எதிர் உயிர்க்கொல்லி என்றால் என்ன?

www.Padasalai.Net

CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



57) தாலஸ் - வரையறு

58) இருவிதையிலைத் தாவரங்களின் இரு பண்புகளை எழுதுக.

59) புரோகேரியாடிக் செல் - வரையறு

60) காற்று நுண்ணறைகளின் பணிகளைக் கூறுக.

**VI. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 6×5=30**

61) அ) கடிகாரங்களின் வகைகளைப் பற்றி சிறுகுறிப்பு வரைக. (அல்லது)

ஆ) பெரிஸ்கோப் செயல்படும் விதம் பற்றி விவரிக்கவும்.

62) அ) உராய்வின் பல்வேறு வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக. (அல்லது)

ஆ) வேதிவினை மூலம் சுற்றுசூழல் மீது ஏற்படும் விளைவுகளை விளக்குக.

63) அ) அமிலமழையின் விளைவுகள் யாவை? அதை எவ்வாறு தடுக்கலாம்? (அல்லது)

ஆ) பாக்டீரியா மற்றும் அதன் அமைப்பினைப் பற்றி சிறுகுறிப்பு வரைக.

64) அ) மருத்துவத் தாவரங்களின் பெயர்களை எழுதி அவற்றின் பயன்களை விவரிக்கவும் (அல்லது)

ஆ) புரோபயாட்டிக் பற்றி குறிப்பு வரைக.

65) அ) இருவிதையிலை மற்றும் ஒருவிதையிலைத் தாவரங்களுக்கு இடையே உள்ள ஏதேனும் ஐந்து வேறுபாடுகளை எழுதுக. (அல்லது)

ஆ) ஜிம்னோஸ்பெர்ம்களின் பொருளாதார முக்கியத்துவத்தை எழுதுக.

66) அ) மனிதக் கண்ணின் உள்ளமைப்பின் படம் வரைந்து பாகங்களைக் குறி.

(அல்லது)

ஆ) உட்சுவாசத்திற்கும், வெளிச்சுவாசத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?

********

CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com